REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 8உ செவ்வாய் (25—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 9உ புதன் (26—10—55) [இதழ் 173

3-வது உருக்குத் தொழிற்சாலை ரூ. 125 கோடி மதிப்புடையதாம்!

வட இந்தியாவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்றுவது உருக்குத் தொழிற்சாலையின் மதிப்பு ரூ. 125 கோடி இருக்குமென சர்க்கார் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறாராம்.

தொழிற்சாலை அமைப்பிற்கு மட்டும் ரூ 110 கோடி செலவாகும் என்றும், தொழிலாளர் குடியிருப்பு அமைக்கவும், இதர செலவுகளுக்காகவும் ரூ 15 கோடி செலவாகும் என்றும் திட்டத்தைத் தயாரித்துள்ள பிரிட்டிஷ் கம்பெனியினர், திட்டக் குழுவிற்குத் தெரிவித்திருக்கின்றனராம்.

'இமய உறவால் குமரி பெற்ற பலன் என்ன?'

'பலன்பெறும் வடவர் சொந்தம்கொண்டாடுவதால் உறவு முளைத்துவிடுமா?'

'உரிமை கோருகிறோம் — நியாயத்தினால்; தருவதற்கு மறுக்கிறார்கள்—மமதையினால்'

ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்!

"'இந்திய ஒற்றுமை' என்பது, 'மிக மெய்யான ஒரு உருவம்' என்பதை வர்ணிப்பதற்கு மிகச் சிரமப்பட்டு வடநாட்டுத் தலைவர்கள் சமீப காலமாகப் பேசி வருவதை நாம் காண்கிறோம்.

"இமயம் முதல் குமரி வரை ஒரே நாடு என்று உறவு கூறுகிறார்கள்—சொந்தம் கொண்டாடுகிறார்கள்.

"இமயத்திற்கும்—திராவிடத்திற்கும் உள்ள சொந்தம் எத்தகையது? 'பூகோளப் படத்தில் மாணவர்கள் படிக்கிறார்கள்' என்ற அளவில்தான், இமயத்திற்கும்—நமக்கும் சொந்தம் இருக்கிறதே தவிர, வேறென்ன சொந்தம் இருக்கிறது?

"'நான் இமயத்தின் அடிவாரத்திலிருந்து வருகிறேன்; நீங்கள் குமரி எல்லையில் வசிக்கிறீர்கள்; எனக்கு குமரியும் சொந்தம்—அதேபோல உங்களுக்கு இமயமும் சொந்தம்,' என்று பண்டித நேரு பேசுகிறார். 'பேசியிருக்கிறார்' என்றால், அதில் சில வாசகங்கள் இருக்கின்றன என்பதைத் தவிர, அந்த வாசகங்களில் விவேகம், நியாயவாதம் ஏதேனும் இருக்கிறதா?

"இமயம் நமக்குச் சொந்தம் என்று கூறுகிறார்; அப்படியானால், அந்தச் சொந்தத்தினால் நாம் அனுபவித்த சுகம் என்ன? பெற்ற பலன் என்ன? நமக்குக் கிடைத்திருக்கும் மதிப்பு எவ்வளவு? பெருகியிருக்கிற வளம் எவ்வளவு? கணக்கிட வேண்டாமா? 'சொந்தம்' என்று கூறுவதினாலேயே உறவு முளைத்துவிட முடியுமா? உறவு என்று சொன்னால் பரஸ்பரம் நல்வாழ்க்கையும், நல்லெண்ணமும் நிலவவேண்டாமா? 'இமயம் எங்களுக்குச் சொந்தம்' என்று சொன்னால், எங்கே எங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய நல்வாழ்வு?

"'குமரி எனக்குச் சொந்தம்' என்று பிரதமர் நேரு கூறுகிறார்; அந்தச் சொந்தத்தினால் அவர் பலன் பெற்றுக்கொண்டிருக்கிறார்; சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். 'இமய மலைவாசிக்குக் குமரி சொந்தம்' என்று அவர் கூறுகிற நிலை இருப்பதினால், நாம் அவர்களுக்குக் கோடிக்கணக்கான பணத்தைக் கொள்ளை கொடுப்பவர்களாக இருக்கிறோம். இந்த சுகத்தை, நம்மீது சொந்தம் கொண்டாடுவதால் அவர்கள் பெற்றிருக்கின்றனர்; ஆனால், நாம் இந்தச் சொந்தத்தினால் பெற்றது என்ன? வடக்கு மேலும் மேலும் வளமுற்று வாழவும், தெற்கு தேய்ந்து தேய்ந்து, தேம்பித் தேம்பி அழவுமான நிலைதானே?

"இப்படி நாம் எத்தனையோ நியாய அடிப்படையைக் காட்டி, நமது நாடு, நமக்காக வேண்டுமென்கிறோம்.

"பண்டித நேரு அவர்கள், அண்மையில் தமிழ் நாட்டிற்கு வந்திருந்தபோது, சென்ற இடங்களிலெல்லாம் நம்மை மனதில் வைத்துக்கொண்டே—இந்தியாவின் ஒற்றுமை குறித்தும், ஐக்கியம் பற்றியும், அந்த இந்தியா முன்னேறிவரும் விவரம் குறித்தும், மேலும் முன்னேற வேண்டிய அவசியம் குறித்தும், அதற்கான வழிகள் குறித்தும் பேசிக்கொண்டே வந்த அவர், வேலூரில் மட்டும், 'இனி இந்தியாவைத் துண்டாட அனுமதிக்க மாட்டேன்' என்று பேசியிருக்கிறார்.

"இனி இந்தியாவைத் துண்டாட அனுமதிக்க மாட்டேன்—என்பதில், 'இனி' என்ற சொல்தான் மிக முக்கியமானது.

"பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னால், 'இந்தியாவைப் பிரிக்க அனுமதிக்க மாட்டோம்' என்று பேசினார்கள்; இப்போது, 'இனி' என்ற சொல்லையும் சேர்த்துப் பேசுகிறார்கள்.

"பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் இப்படித்தான் காங்கிரஸ் தலைவர்கள் கூறிவந்தனர்—'பாரத மாதாவைத் துண்டாடுவதைக் காட்டிலும், எங்களிலே பலபேர் செத்து மடிவதையே மேல் என்றெண்ணுவோம்; இந்தியாவைப் பிரிக்க அனுமதிக்கமாட்டோம்' என்றுதான் பேசினார்கள்; ஆனால், நடந்தது என்ன? பாகிஸ்தானைப் பிரித்துத் தனிச் சுதந்திர நாடாக்கும் சாசனத்தில், வெள்ளைக்காரர்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, இன்று, 'பிரிவினை இல்லை' என்று பேசியவர்கள்தான் கையெழுத்துப் போட்டார்கள்; அவர்கள் அந்தச் சாசனத்தில் இட்ட கையெழுத்துத்தான் இன்றும் மிளிர்ந்துகொண்டிருக்கிறது — அவர்களுக்கு அறைகூவல் தருவதுபோல! அதனால்தான், 'இனி இந்தியாவைப் பிரிக்க அனுமதிக்க மாட்டோம்' என்று, இப்போது பேசுகிறார்கள். அந்த 'இனி' என்ற சொல்லுக்குப் பின்னால், முன்பு அவர்கள் கண்ட தோல்வியும், அதனால் பெற்ற வெட்கமும் தொக்கி நிற்கின்றன.

"'இனி இந்தியாவைத் துண்டாட அனுமதிக்கமாட்டேன்'—என்று பேசுகிற பண்டிதரின் போக்கிலே, என்ன ஜனநாயகப் பண்பு இருக்கிறது?

"நாம் நியாயத்தின் அடிப்படையில் நின்று, 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்று உரிமை முழக்கமிடுகிறோம்; ஆனால் அவர்கள் மறுக்கிறார்கள்.

"நமது கோரிக்கை, நியாயத்தின் அடிப்படையில் எழுந்தது; அவர்களின் மறுப்பு மமதையினால் எழுந்தது. மக்களை மக்களாக மதிக்காது மாக்களாக நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள்.

"இப்படி இவர்கள் மமதையோடு பேசுவதற்குக் காரணம், இவர்களிடமுள்ள ஆதிக்க அரசியல் நிலைதான் என்பதைத் தவிர வேறென்ன?

"இந்த அரசியல் நிலை, வெளி விவகாரங்களில்கூட—எதிர்பாராத இடங்களில் இருந்தெல்லாம் கூட, சிற்சில நேரங்களில் வெற்றியைத் தேடித் தரக்கூடும்; ஆனால், உள்நாட்டில் என்றென்றைக்கும் இந்த அரசியல் நிலை, அநியாயத்திற்கும் அக்கிரமத்திற்குமே துணை போய்க்கொண்டிருக்காது என்பதை மமதையோடு பேசுபவர்கள் உணர்ந்தாகவேண்டும்.

"நமது கோரிக்கையை எந்தக் காரணம் காட்டி இவர்கள் மறுக்கிறார்கள்? எவருக்கு இதுவரை இந்தத் துணிவு இருந்தது?

"நாம் நமது கோரிக்கையின் நியாயத்தை எந்த மன்றங்களிலும், எவரிடத்திலும் வாதிட்டு நிலைநாட்டத் தயாராயிருக்கிறோம்—என்று, ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சொல்லியிருக்கிறோம்.

"உலகத்திலே, நீதிமான்கள்—நேர்மையாளர்கள், அறிவுலக மேதைகள்—என்றுள்ள எவரையும் அழைத்துவாருங்கள்; எங்கள் கோரிக்கை நியாயமா இல்லையா என்று கேட்போம்—என்று கூறியிருக்கிறோம்.

"'அகில இந்திய' என்று துவங்குகிற எந்த ஒரு காரியமானாலும் சரி—அது நாடகக் கழகங்கள், இசைக்கூடங்கள் என்ற கலை நிறுவனங்களாயினும் சரி—அல்லது, 'அகில இந்திய உளுத்தம்பருப்பு உடைப்போர் சங்கம்' என்றிருப்பதாயினும் சரி—அரசியல் கட்சிகளாயினும் சரி—அவைகள் வடக்கிற்கு வாழ்வும் ஏற்றமும் தரவும், தெற்கிற்குத் தேய்வும் தாழ்வும் தரவும்தான் பயன்பட முடியும்.

"'அகில இந்திய' என்ற ரீதியில் துவங்கும் எந்தப் பொருளாதார நிறுவனமாயினும், அதில் வடவர் ஆதிக்கம்தான் நிலவுகிறது.

"பாங்கிகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் முதலியவற்றில் எல்லாம் வட நாட்டவரின் முதலீடுதான் ஆதிக்கம் செலுத்துகிறது.

"அண்ணா அவர்கள், 'பணத் தோட்டம்' என்று தொடர் கட்டுரை ஒன்று எழுதினார்கள்; அதில், வட நாட்டவரின் பொருளாதார ஆதிக்கம் எந்த அளவு இந்த நாட்டில் இருக்கிறது—என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

"இப்படி அரசியல், பொருளாதாரத் துறைகளில் வட நாட்டவர் ஆதிக்கம் செலுத்த வாய்ப்புப் பெற்றிருப்பதினால்தான், 'தெற்கு—குமரி எங்களுக்குச் சொந்தம்' என்கிறார்கள்—தங்களின் இலாபம் கருதி—பயன் கருதி!

"நாம் இந்த வடவரின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பதால் தாழ்வுறுகிறோம்—வீழ்கிறோம்—என்று புள்ளிவிவரங்களைப் பிரித்துக் காட்டிக் கேட்கிறோம்—'எங்கள் நாடு எங்களுக்காக வேண்டு'மென!

"நமது இந்த நியாயமான கோரிக்கையை என்ன காரணங்காட்டி, இவர்கள் 'தவறு' என்று கூறுகிறார்கள்?

"குறி சொல்லுவதைப்போல இங்குள்ள சிலர், 'திராவிட நாடாவது—கிடைப்பதாவது? இந்தியாவையாவது—பிரிப்பதாவது? திராவிட நாடு வெறும் காட்டுக் கூச்சல்; அது கிடைக்காது; தர மாட்டோம்'—என்று பேசுகிறார்களே தவிர, நாம் காட்டுகிற காரணங்களை மறுத்துப் பேச வாய் திறப்பதைக் காணோம்!

"அரசியலில் நியாய விவாதம் வேண்டாமா?

"இமயம் முதல், குமரிவரை ஒன்று என்றிருப்பதால், வடக்கு சோலையாகவும், தெற்கு பாலையாகவும் வேகமாக மாறி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

தாரா சிங் குழுவினர் உறுதி

கோரிக்கையை விட்டுக் கொடுக்க மறுப்பு

புதுடில்லி, அக். 24—

மாஸ்டர் தாராசிங் பண்டித நேருவின் அழைப்பின்பேரில், பஞ்சாபி மொழி மாநிலம் அமைப்பது குறித்து நேருவின் இல்லத்தில் அவரைச் சந்தித்து இரண்டரை மணி நேரம் வாதிட்டிருக்கிறார்.

தாராசிங்கின் தூதுக்குழுவினரில் தாராசிங் உட்பட ஐவர் இருந்தனர்.

பேச்சுவார்த்தைகளின்போது, தாராசிங் குழுவினர், தங்கள் கோரிக்கையில் இம்மியளவும் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

இதுபற்றிக் குறிப்பிட்ட தாராசிங், நேரு தங்களை மீண்டும் அழைத்துப் பேசுவார் என்று தான் நம்புவதாகவும் கூறப்படுகிறது.

1947-க்குப்பின் தாராசிங் நேருவைச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.

பாகிஸ்தான் எல்லையோரத்தில் ஆப்கன் துருப்புகள்?

கராச்சி, அக் 24—

'பாகிஸ்தான் எல்லைக்கு அப்பால், ஆப்கன் துருப்புகள் நடமாட்டமிருப்பதாகத் தூப்பறியும் இலாகா மூலம் தகவல் கிடைத்திருக்கிறது,'

என்று, பாகிஸ்தான் அதிகார வட்டாரத்தினர் கூறியுள்ளனராம்.

பாகிஸ்தான் எல்லையோரமாக ஆப்கன் பகுதியில் மலை சாதியினர் நடமாட்டமும் வழக்கத்திற்கு மாறாக அதிகமாகியிருப்பதாகவும் பாகிஸ்தான் அதிகார வட்டத்தினர் கருதுகின்றனராம்.

எல்லையோரத்தில் எந்த நிலைமையையும் சமாளிக்க பாகிஸ்தான் சர்க்கார் பலமான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனராம்.

இரு நாடுகளும், தங்களது தூதுவர்களைத் திருப்பிப் பெற்றுக் கொண்டிருப்பதை ஒட்டி அவர்களது அரசியல் உறவுகள் பாதிக்கப் பட்டிருப்பது நினைவிலிருக்கலாம்.

காஷ்மீர் அடங்கிய இந்திய பூகோள படம்

இந்திய சர்க்கார் அகற்றுகின்றனர்

காஷ்மீர் — ஜம்மு பகுதிகளை இந்திய எல்லைக்குள் அடங்கிய பகுதிகளாகக் காட்டும் இந்திய பூகோளப் படம் ஒன்று, கராச்சியிலிருக்கும் இந்திய சர்க்கார் பாங்கி கட்டிடத்தில் இருந்தது. இந்தப் படத்தை அகற்றவேண்டும் என்று கோரி பாகிஸ்தானியர் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடும் என்று தெரிந்தவுடன், பாங்கி கட்டிடத்திலிருந்து அந்தப் படத்தை அதிகாரிகள் அப்புறப்படுத்தி விட்டனர் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—10—'55 செவ்வாய்

விளம்பர ஆயுதம்!

ஏழேமுக்கால் கோடி திராவிட இன மக்களின் நிரந்தரமான நல்வாழ்விற்கும், மானத்திற்கும் பாதுகாப்புத் தேவை என்ற நியாயமான அடிப்படையில் நாம் எழுப்புகிற 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற விடுதலை முழக்கம் கேட்டு கலக்கமுற்றுள்ள வடநாட்டு ஆதிபத்தியவாதிகள், தங்களிடம் சிக்கியுள்ள அதிகார பலம் என்றென்றைக்கும் தங்களின் ஆதிக்கத்திற்கு உறுதுணையாய் நின்று பாதுகாப்புத் தரும் என்றெண்ணிக்கொண்டு, 'இனியும் இந்தியாவைத் துண்டாட அனுமதிக்கப்போவதில்லை' என்று எதேச்சாதிகாரப் போக்கில் பேசுகின்றனர்.

அந்த வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தென்னகத்தில் தங்களைக் கொற்றவர்களாய் ஏற்றுக்கொண்டு குற்றேவல் புரியும் சில எடுபிடிகளாலேயே நமது விடுதலைக் குரலை ஒடுக்கிவிட முடியும் என்று நம்பிக் கிடந்த நிலை இன்று குலைந்து வருகிறது. தாங்களே களம் புகவேண்டிய கட்டாய நிலை வடநாட்டவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

தென்னாட்டில், வடவருக்கு வரி வசூலித்துத் தரும் 'ஏஜண்டு'களால், நமது விடுதலைக்குரல் நாளுக்கு நாள் வலுப்பெறத்தான், தங்களது கையாலாகாத்தனத்தால் உதவ முடிந்ததே தவிர, 'வடவரின் ஆதிக்கம் தென்னாட்டில் இருக்க வேண்டியது அவசியம்தான்' என்று மக்களுக்கு உணர்த்த முடியவில்லை. ஏனெனில், வடவரின் ஆதிக்கம் எந்த ஒரு நியாயமான காரணத்தாலும் தென்னாட்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பதால்.

தடையுத்தரவு, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், சிறைச்சாலை என்று அடுக்கடுக்காக அடக்குமுறைக் கணைகளை வீசியும், நமது குரல் உரம் பெறுவதை இந்தத் தென்னாட்டுக் காங்கிரஸ் ஆட்சியாளரால் தடுக்க இயலவில்லை.

தங்களிடமுள்ள ஆயுதங்கள் ஆற்றலற்றுவிட்டன என்பதால், தங்களின் வடநாட்டு எஜமானர்களிடம் ஓடி, புதிய ஆயுதங்களைத் தேடிப் பெற முயற்சிக்கின்றனர்.

இப்படி இவர்கள் பெற்ற எத்தனையோ விசித்திரமான ஆயுதங்களை உபயோகித்துக் கை சோர்ந்துவிட்ட இவர்கள், இன்று புதியதொரு ஆயுதம் ஏந்தி நம்மை எதிர்க்க முற்படுகின்றனர்.

அந்த ஆயுதம் எத்தனை வலுவற்றது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள் போலும். தங்களது வடநாட்டு எஜமானர்களைத் துதி பாடுவதுதான் இந்த நாட்டில் பெரிதாக விளம்பரப்படுத்திக் காட்டுவதுதான் அந்த புதிய ஆயுதம்.

"எங்கள் தலைவர் நேரு எப்படிப்பட்டவர் தெரியுமா? ஏக இந்தியாவின் பிரதமர். ஆசியாவின் ஜோதி! சமாதானத் தூதுவர். மேற்கிற்கும் கிழக்கிற்கும் இணைபாலமாக விளங்குபவர்.

அமெரிக்கா சென்றார்; அமோக வரவேற்பு. விமான நிலையத்திற்கே வந்தார் அந்த நாட்டுத் தலைவர் ட்ரூமன்.

திருமதி ட்ரூமன் புன்னகை பூக்க, பொற்கரம் பற்றிக் குலுக்கினர். வானளாவிய மாளிகைக் கூட்டத்தைப் பிளந்து நின்ற வீதிகளிலே பவனி வந்தார். ஆடவரும் ஆரணங்குகளும், ஆற்றின் இருமருங்கும் காட்சி தரும் மாமரங்களைப்போல், அணிவகுத்து நின்று, கரம் தூக்கி மலர் தூவி, சிரம் அசைத்து மகிழ்ச்சிப் பெருக்கால் ஆடி மகிழ்ந்தனர். விருந்தும், வேடிக்கையும் கொஞ்சமா?

இந்தோனேஷியா சென்றார். ஆரத் தழுவிக் கொண்டார் அந்த நாட்டுத்தலைவர் சுகர்ணோ; காடு மேடுகளையும், நாடு நகரங்களையும் கண்டு திரும்பினார் நேரு.

செஞ்சீனா சென்றார்; சௌ,மாவ், சூடே முதலானோர் வரவேற்றனர். வாழ்த்தினர். ராஜோபசாரம் செய்தனர். பதினைந்து நாட்கள், அந்தப் பரந்த பொன்னாட்டைப் பார்த்துப் பூரித்துத் திரும்பினர், சென்ற ஆண்டில்.

ரஷ்யா சென்றார், இந்த ஆண்டில்.

மாஸ்கோ நகரம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. மார்ஷல் புல்கானினும், குருஷ்சேவும், மாலடோவும் விமான நிலையத்தில் காத்திருந்தனர். வரவேற்பு என்றால், இதுவரை எவருக்குமே தராத வரவேற்பு அங்கு. புல்கானின் கனிவொடு கனிரசம் தந்தார். நேரு, மாங்கனி அரிந்து தந்து, பாரதத்தின் மாண்பைச் சுவைப்பீர் என்றார். எங்கு திரும்பினும் நேருவைச் சுற்றி மக்கள் வெள்ளம்; பதினைந்து நாட்கள், பறவை எனப் பறந்து, அந்த நாட்டினரின் பாராட்டுரைகளையும், பலவகை வரவேற்புகளையும் பெற்றார். நாடு திரும்பியதும் 'பாரத் ரத்னா' பட்டம் தந்தோம்.

திக்கெட்டிலும் இப்படி வரவேற்று வாழ்த்தப்படுபவர் எங்கள் பண்டிதர். அந்தப் பண்டிதரையா நீங்கள் எதிர்க்கிறீர்கள்?"

இப்படிப் பேச முற்படுகின்றனர் சில தென்னாட்டுத் தலையாட்டிகள்.

நேருவுக்கு வெளிநாட்டவர் தரும் வரவேற்புகளைப் பெரிதாக விளம்பரம் செய்வதின் மூலம், அவரது ஆதிக்கம், தென்னாட்டு மக்களை அடிமை கொள்வது நியாயமே, என நிலைநாட்ட முயற்சிக்கின்றனர், இந்தப் பரிதாபத்திற்குரிய—ஆனால் மன்னிப்பதற்கு முடியாத தென்னாட்டு எடுபிடிகள்.

நேருவிற்குத் தரப்பட்ட வரவேற்பினால், இந்தியாவின் கௌரவம் பல படிகள் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தியா ஒன்றாயிருப்பதால்தான் நமக்கு இந்தப் பெருமை கிடைக்கிறது; எனவே, 'இந்தியா ஒன்றாகவே இருக்கவேண்டும்; துண்டாடப்படக்கூடாது' என்று திராவிட மக்களிடத்தில் கூறி அவர்கள் உள்ளத்தில் வடநாட்டு ஆதிக்கத்திற்கு எதிராக இயற்கையாகவே முளைத்துக் கிளைவிட்டு வளர்ந்துள்ள விடுதலை வேட்கையை அற்றுப்போகச் செய்துவிடலாம் என பகற்கனவு காணும் அப்பாவிகளின் கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டுவர விழைகின்றோம்—படித்தும் பயன் மட்டுமின்றி இழந்துவிட்டிருக்கின்ற வேறொன்றையும் பெற வேண்டுமென்பதற்காக.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு மாகாணமாக 1936 வரையில் அங்கம் வகித்ததுதான், இப்போதைய அண்டை நாடான பர்மா.

அந்த நாட்டுப் பிரதமர் யூநு சென்ற கிழமையில் மாஸ்கோ சென்றுள்ளார்-பண்டித நேருவைப் போல புல்கானினது அழைப்பின் பேரில்தான்.

அவருக்கும் நேருவுக்குத் தரப்பட்டதைப் போன்ற பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டிருக்கிறது. அவரது புகைப் படம் 'பிராவ்தா' இதழில் முதல் பக்கத்தில் பெரிய அளவில் வெளியிடப்பட்டிருக்கிறது. அவரை ! வரவேற்க- நேருவை வரவேற்க வந்ததைப் போலவே—மார்ஷல் புல்கானின், மாலடோவ், மாலங்கோவ் முதலானோர் மட்டுமின்றி, பல்லாயிரம் மக்களும் வந்திருக்கின்றனர், விமான நிலையத்திற்கு; வாழ்த்தியிருக்கின்றனர்; ஒலி முழக்கி மலர் தூவி. நேருவுக்குக் கிடைத்ததைப் போன்றே இராஜோபசாரம் தரப்பட்டிருக்கிறது—யூ-நூவிற்கு!

இங்குள்ள தேசிய ஏடுகள், இந்தச் செய்தியை, அரை அங்குலத்தில் வெளியிட்டுவிடுவதினாலேயே, யூ-நூவிற்குத் தரப்பட்ட வரவேற்பு, நேருவுக்குத் தரப்பட்டதைவிட தரத்திலும், அளவிலும், எவ்வகையாலும் குன்றியதல்ல என்பதை, குறைமதியோர் தவிர நல்லவர் அனைவரும் ஒப்புவர்.

எனவே, முப்பத்து ஆறு கோடி மக்களைக்கொண்ட இந்தியப் பிரதமரானாலும், சின்னஞ் சிறு பர்மிய நாட்டுப் பிரதமரானாலும், வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, வரவேற்கும் நாட்டின் நல்லெண்ணத்திற்கும் உள்நோக்கிற்கும், செல்வாக்கிற்கும், சிறப்பிற்கும் ஒப்ப வரவேற்புக் தரப்படுவது இயற்கையாகும்.

பர்மியத் தலைவருக்குத் தரப்பட்ட வரவேற்பு பற்றிய விபரங்களைத் தெரிந்துகொண்டேனும், தென்னாட்டில் உள்ள தலையாட்டிகள், தங்களது எஜமானர்களுக்குக் கிடைக்கும் வரவேற்புகளை அரசியல் கைமுதலாகக் கொண்டு, நமது விடுதலைக் குரலை ஒடுக்கமுற்பட்டு நட்டமுற வேண்டாம் என்று எடுத்துக் காட்டுகிறோம்.

வலிமை பொருந்திய பல கொலைக் கருவிகளையும், ஆயுதங்களையும், கண்டே அஞ்சாத திராவிடர், வலிமை ஏதுமில்லாத—ஆனால் பளபளப்பான இந்த விளம்பர ஆயுதத்தால் வீழ்ந்துவிடமாட்டார்கள் என்பதையும் மனதில் கொள்ள வேண்டுமென நினைப்பூட்டுகிறோம்.

பரீட்சை முறை பற்றி விசாரணை நடத்தப்படும்

இப்பொழுதுள்ள பரீட்சை முறை பற்றி விசாரணை நடத்துவது சம்பந்தமாகச் சென்னை சர்வகலாசாலை சிண்டிகேட் ஆலோசித்து வருகிறது.

அவாமி லீக் எல்லா வகுப்பாருக்கும் சொந்தமாகிறது!

'முஸ்லீம்' என்ற சொல்லை நீக்கி பாக். எதிர்க் கட்சியினர் விளக்கம்

டாக்கா, அக். 22—

கிழக்கு பாகிஸ்தான் அவாமி முஸ்லீம் லீகினர், தங்கள் இயக்கத்தை முஸ்லீம்களுக்கு மட்டுமின்றி எல்லோருக்கும் பொதுவான இயக்கமானதாக ஆக்கவேண்டும்என்று, கருதி, இயக்கத்தின் பெயரில் உள்ள 'முஸ்லீம்' என்ற சொல்லை நீக்கிவிட்டிருக்கின்றனர்.

அவாமி லீகின் மாநாட்டில் இதற்கான தீர்மானம், பலத்த ஆரவாரத்திற்கிடையே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'இந்து—முஸ்லீம் சகோதரத்துவம் வாழ்க,' 'அவாமி லீக் வாழ்க' என்ற ஒலி, மாநாட்டு மண்டபத்தில் கூடியிருந்தோரால் விண்ணதிர முழக்கப்பட்டிருக்கிறது.

கூடியிருந்த 700 பிரதிநிதிகளில் 5 பேர்கள் மட்டுமே, இயக்கம், முஸ்லீம்களல்லாதாருக்கும் உரிமையுடையதாக்கப்படுவதை எதிர்த்திருக்கின்றனர்.

'அவாமி முஸ்லீம் லீக்' என்ற பெயரில் உள்ள 'முஸ்லீம்' என்ற சொல்லை நீக்கவேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய எச். எஸ் சுராவர்த்தி குறிப்பிட்டதாவது :—

"ஒன்றுபட்ட இந்தியாவில், 'இந்து காங்கிரஸ், வாழ்க்கையின் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துகிறது ; முஸ்லீம்களுக்கு உரிய பங்கு கிடைப்பதில்லை,' என்று கூறித்தான், பாகிஸ்தான் வேண்டுமெனப் போராடினோம் ; ஆனால், பாகிஸ்தான் அமைந்த பிறகு, அதில் வாழும் இந்துக்களுக்கு, அவர்களுக்குரிய பங்கினைத் தராதிருப்பது நியாயமாகாது ; பாகிஸ்தான் இந்துக்கள் ஒன்றுபட்டு, தங்கள் தேவைகளுக்காகக் குரல் கொடுத்து வருகின்றனர் அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு நாம் இணங்காவிடின், அவர்களிடமிருந்து விசுவாசத்தை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? அன்றைய இந்தியாவின் முஸ்லீம்களின் நிலையைப். போன்றுதானே, பாகிஸ்தானில் இந்துக்களின் நிலையும் இருக்கிறது.

"எனவே, இந்துக்களுக்கு அவர்களுக்கு நியாயமான எல்லாவற்றையும், அரசியல் பொருளாதாரத் துறைகளில் அவர்களுக்குரிய பங்கினைத் தந்துவிட்டு, பின்னர்தான், அவர்களது விசுவாசம் குறித்து நாம் பேசலாம்—பேச முடியும்."

அடுத்துப் பேசிய கிழக்கு பாகிஸ்தான் முஸ்லீம் அவாமி லீக் தலைவரான மௌலானா அப்துல் அமீது கான் பஷானியும், 'முஸ்லீம் என்ற சொல்லை ஏன் நீக்கவேண்டும்?' என்பதற்கான காரணங்களை விளக்கியும், முஸ்லீம்கள் அல்லாதார், இந்துக்கள் முதலானோரும், பாகிஸ்தானில் பாதுகாப்புடன் வாழவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

---

29 பேர் கைது

பாராபங்கி, அக். 22—

கடந்த ஞாயிறன்று, அவத் சரண் வர்மா என்ற ம. சோ. கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினரையும், சியாராம் என்ற ஊழியரையும் பொதுக்கூட்டம் ஒன்றில் சிலர் கொலை செய்தனர். அதை ஒட்டி இன்று போலீசார் மேலும் ஆறு பேர்களைக் கைது செய்திருக்கின்றனர் ; இதுவரை மொத்தம் 29 பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கு முன்பு, இந்த ஊரிலேயே ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ-வும் கொலை செய்யப்பட்டது நினைவிலிருக்கலாம்.

பர்மியப் பிரதமர் யூ-நூவுக்கு மாஸ்கோவில் மகத்தான வரவேற்பு!

விமான நிலையத்தில் புல்கானின் வரவேற்றார்

மாஸ்கோ, அக். 24—

பர்மியப் பிரதமர் யூ-நூ ரஷ்யாவில் அழைப்பின் பேரில் இங்கு வந்திருக்கிறார்.

விமான நிலையத்தில் அவருக்குப் பிரம்மாண்டமானதோர் வரவேற்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இவருக்குத் தரப்பட்டதைப் போன்ற மகத்தான வரவேற்பு, இதற்கு முன் வட வியட்நாம் குடியரசுத் தலைவர் டாக்டர் ஹோ-சி-மின், இந்தியப் பிரதமர் நேரு ஆகியோரைத் தவிர, வேறு எவருக்கும் தரப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தில் பர்மியப் பிரதமர் யூ-நூவை, மார்ஷல் புல்கானின், மாலடோவ் மாலங்கோவ், மற்றும் உதவி மந்திரிகள் முதலிய சோவியத் தலைவர்கள் வரவேற்றிருக்கின்றனர்.

மற்றும், பிரிட்டிஷ், இந்திய, பிரெஞ்சுத் தூதுவர்களும் விமான நிலையத்தில் யூ-நூவை வரவேற்றிருக்கின்றனர்.

விமான நிலையத்திலேயே இராணுவ அணிவகுப்பு மரியாதையும் பிரதமருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

விமான நிலையத்தில் கூடியிருந்த பள்ளிக் குழந்தைகள், மலர்ச் செண்டுகளை யூ-நூவிடம் வழங்கி வரவேற்றிருக்கின்றனர.

சோவியத் இராணுவத்தினர், ரஷ்ய, பர்மிய தேசியக் கீதங்களை இசைத்திருக்கின்றனர்.

300-க்கும் மேற்பட்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகள் விமான நிலையத்தில் கூடி, 'பர்மிய—ரஷ்ய நல்லுறவு வாழ்க,' 'யூ-நூ வாழ்க' என்று குரல் எழுப்பியிருக்கின்றனர்.

ஆயிரக்கணக்கான சோவியத் மக்கள் பிரதமர் யூ நூவைக் கண்டு பேராரவாரம் செய்திருக்கின்றனர்.

விமான நிலையத்தில் கூடியிருந்த இதர சோவியத் அதிகாரிகளும், மற்றையோரும் பிரதமர் யூ-நூவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டபின் யூ-நூ, தனது ரஷ்ய வருகை குறித்து, சில நிமிட நேரம் பேசிய பின், விருந்தினர் மாளிகைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சியின் அதிகாரபூர்வமான இதழான 'பிராவ்டா,' தனது முதல்பக்கத்தில், யூ-நூ வின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும். பர்மிய மக்களைப் பற்றிய வரலாற்றுச் சுருக்கத்தையும் பிரசுரித்திருப்பதுடன், அவரது புகைப்படத்தையும் முதல் பக்கத்திலேயே பெரும் அளவில் வெளியிட்டிருக்கிறது.

பர்மியப் பிரதமரின் சமாதானப் பணியும் வெகுவாக அந்த இதழினால் புகழ்ந்தெழுதப்பட்டிருக்கிறது.

இதற்கு முன் கம்யூனிஸ்டு அல்லாத தலைவர் என்ற முறையில் இந்தியப் பிரதமர் நேருவின் புகைப்படம் மட்டுமே 'பிராவ்டா' இதழில் வெளியிடப்பட்டது.

மதுவிலக்கு விசாரணைக் குழுவின் அறிக்கை

சிபாரிசுகளின் சுருக்கம்

புதுடில்லி, அக். 25—

நாடு முழுவதிலும் மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான இலட்சிய வரம்பு 1958 ஏப்ரல் 1-ந் தேதியாக இருக்கவேண்டுமென்று திட்டக் குழுவால் நியமிக்கப்பட்ட மதுவிலக்கு விசாரணைக் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

அக்குழு சென்ற ஒவ்வொரு மாநிலத்திலும், அத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது பற்றிய பலத்த ஆதரவு இருந்து வருவதாகவும், அக்கொள்கையை எவ்வளவு சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கோரப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

நடப்பு ஆண்டு இறுதிவாக்கில் மாநில சர்க்கார்கள் இக்கொள்கையை அங்கீகரித்து விட்டதாகவும், அதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான இலட்சிய வரம்புத் தேதி இன்னது என்பதாகவும் அறிவித்துவிட வேண்டுமென்று குழு சிபாரிசு செய்திருக்கிறது; அவ்வாறு செய்வதன் மூலம் மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றும் பிரச்சினையில் பொது மக்களின் முழு ஒத்துழைப்புக் கிடைக்க அவர்களைத் தயார் செய்துவிடலாம் என்றும் குழு கருதுகிறது.

மாநில சர்க்கார்கள் இவ்வாறு மதுவிலக்குக் கொள்கை அறிவிப்புச் செய்கிற தேதிக்கும், பூரண மதுவிலக்கு அமுலுக்கு வருகிற தேதிக்கும் (1958 ஏப்ரல் 1-ந் தேதிக்கும்) இடைப்பட்ட காலத்தை, இது சம்பந்தமாய் தேவைப்படக்கூடிய நிறுவன அமைப்புக்களை உருவாக்குவதற்கும், மதுவிலக்கு அமுலுக்குத் தேவைப்படுகிற இதர பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

ஏற்கனவே மதுவிலக்கு அமுலில் உள்ள மாநிலங்களில், மதுவிலக்கு, முன்னிலும் அதிகத் தீவிரத்துடனும், இன்னும் நல்ல உருப்படியான பலன் கிடைக்கச் செய்வதற்காகக் குழு சிபாரிசு செய்கிற குறிப்பிட்ட அதிகப்படியான நடவடிக்கைகளுடனும் அவை அமுல் செய்யப்படும்.

இந்த மதுவிலக்குக் குழு 9 பேரை உள்ளடக்கி, சென்ற 1954 டிசம்பரில் நியமிக்கப்பட்டதாகும்.

மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக மாநில சர்க்கார்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் கிடைத்துள்ள அனுபவத்தைப் பரிசீலனை செய்வது; அந்த நடவடிக்கைகள் எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடந்துள்ளது என்று நிர்ணயிப்பது; நடைமுறையில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் பற்றி ஆராய்வது என்ற நோக்கமும், தேசீய அடிப்படையில் மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவது பற்றிச் சிபாரிசு செய்வதும், அப்படி மேற்கொள்கிற மதுவிலக்குத் திட்டத்தை எந்த முறையில்—என்னென்ன கட்டங்களில் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்பது பற்றியும், அதற்கான நிறுவன அமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியும் வரையறுப்பதும், இது குறித்த பிற சிபாரிசுகளைத் தெரிவிப்பதுமே இக்குழுவின் விசாரணைக்குத் தேவைப்பட்ட ஷரத்துக்களாகும்.

இதற்காக, இரண்டு வினாத்தாள்களை வெளியிட்டுபொதுமக்கள்கருத்தைத் தெரிந்துகொள்ளுவதற்கு, குழு முயன்றது.

ஒரு வினாத்தாள் மாநில சர்க்கார்களுக்கும், பொது மக்களுக்கும் விடுக்கப்பட்டது; மற்றொன்று தொழில் நிறுவனங்களுக்காக விடுக்கப்பட்டது.

பொது வினாத்தாள் சம்பந்தமாய் 300 குறிப்புகளும், பதில்களும் கிடைத்தன; அவைகளில் மக்கள் சபை உறுப்பினர்களிடமிருந்து கிடைத்தவை 50 ஆகும்.

குழுவும், அதன் துணைக் குழுக்களும் 13 மாநிலங்களின் தலைநகர்களுக்குச் சென்று, மாநில முதல் மந்திரிகளுடனும், இதர மந்திரிகளுடனும் கலந்து விவாதித்தன. மத்திய மந்திரிகள் சிலரையும் சந்தித்தது.

262 பேர் சாட்சியமளித்தனர்—அவர்களில் 99 பேர் அதிகாரிகள்; 163 பேர் அதிகாரபற்றற்றவர்கள்.

மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற்றுவிட்டதாம்!

மதுவிலக்கு அமுலில் உள்ள பிரதேசங்களில் இன்னும் 'குடி'யைக் கைவிடாதவர்கள் திருட்டுத்தனமாகக் குடிக்கிற மதுவகைகளின் அளவு, மதுவிலக்குக்குமுன் திருட்டுத்தனமாய்க் குடிக்கப்பட்ட அளவைவிட மிகவும் குறைந்துவிட்டிருப்பதால், அந்த அளவுக்கு மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெற்றுள்ளது என்றே குழு தீர்மானித்திருக்கிறது!

பெரும்பாலும் ஏழைகளே குடித்துவந்த கள்ளின் உபயோகம் கணிசமாகத் தடைப்பட்டுவிட்டது ஒரு நிச்சயமான வெற்றியாகும் என்றும், இதர மது வகைகள் விஷயத்தில், எப்போதோ ஒரு தடவை குடிப்பவர்களாய், சட்டத்தை மீற விரும்பாதவர்களாய் இருப்பவர்கள் இப்போது குடிக்காமலிருக்கிறார்கள் என்றும், மதுவிலக்குப் பிரதேசங்களில் இளைஞர்கள் குடிப்பழக்கத்தில் ஈடுபடாமல் தடுக்கப்படுகிறார்கள் என்பது மிகவும் முக்கியமான அம்சமாகும் என்றும் அக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

மதுவிலக்கு அமுலில்லாத பகுதிகளில், இதுவரையில் மதுவருந்தும் பழக்கமில்லாத தரப்பாரிடையில் கூட இப்போது குடிப்பழக்கம் சிறிது சிறிதாய் ஏற்பட்டுவருகிறது என்பதை, குழு, வருத்தத்துடன் தெரிவித்துள்ளது.

இப்பழக்கம், இளைஞர்களையும், 'உயர் குடும்ப'ப் பெண்களில் சிலரையும்கூடப் பீடித்திருக்கிறதாம்.

"முக்கியத் தொழில் இடங்களிலும், பெரிய பாசன ஏற்பாடுகளும் அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதேசங்களிலும், தொழிலாளர்கள் குடிப் பழக்கத்தில் வேரூன்றி வருகிறார்கள்; இதனை அவசரமாகக் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று குழு கூறியிருக்கிறது.

பூரண மதுவிலக்கை அமுல் செய்வதற்காக மாநிலங்களில் செய்யப்படுகிற பூர்வாங்க ஏற்பாடுகள் போதுமானவையா என்பதை கண்டறிவது ஒரு மத்தியக் குழுவின் பொறுப்பாக இருக்கும் என்றும், அக்குழு இனி ஏற்படுத்தப்படும் என்றும், ஏதாவது ஒரு மாநிலம் இப் பிரச்சினையில் முற்றிலும் தயாராக இல்லாவிட்டால் அக்குறைபாடு பற்றி மாநில சர்க்காருக்குத் தெரிவிக்கவேண்டியதும் அக்குழுவின் பொறுப்பென்றும், குழு கூறியிருக்கிறது.

அந்த மத்தியக் குழு, மதுவிலக்கு சம்பந்தமான நடவடிக்கைகளின் முற்போக்கு பற்றி ஆண்டுதோறும் அறிக்கை ஒன்றை, தேசீய அபிவிருத்திக் குழுவுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்; இதன் மூலம், எல்லா மாநிலங்களுக்கும் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கும்படி பார்த்துக் கொள்வதும், இலட்சியத் தேதிக்குள் நாடு முழுவதிலும் மதுவிலக்கு அமுலுக்கு வர வழி செய்வதும் சாத்தியமாயிருக்குமாம்.

நடவடிக்கைகள் என்ன?

கொள்கைப் பிரகடனத் தேதிக்கும், மதுவிலக்கு அமுலுக்கு வருகிற இலட்சியத் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் குழு விவரம் தெரிவித்திருக்கிறது.

முதன் முதலாக, ஓட்டல், சினிமா, சமூக, மத வைபவங்கள் ஆகிய பொது இடங்களில் மது தடை செய்யப்படவேண்டும்; 1956 ஏப்ரல் 1-ந் தேதி முதல் மதுபானம் குடிப்பதை ஊக்குவிக்கிற எல்லா விளம்பரங்களும், இதர பொதுவான ஏற்பாடுகளும் அனுமதிக்கப்படக் கூடாது; சர்க்கார் ஊழியர்கள் மது அருந்தக் கூடாது என்று தடை விதித்து, அவ்விதியை சர்க்கார் உத்தியோக விதி முறைகளில் சேர்க்கவேண்டும் என்று அக்குழு கேட்டுக்கொண்டிருக்கிறது.

குழுவின் நம்பிக்கை

நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவது சம்பந்தமான கொள்கையைப் பாதுகாப்புப் படையினரும் அனுசரித்து நடக்கத் தயாராயிருப்பதால், படையினர் விஷயத்தில் சலுகையான ஏற்பாடு எதுவும் அவசியமில்லை என்று குழு கூறியிருக்கிறது.

வெளிநாட்டு தூதுவராலயங்கள் விஷயத்தில், அவை இந்திய தேசிய உணர்ச்சியை மதித்து நடக்கும் என்றும், இந்தியர்களால் அழைக்கப்பட்டுள்ள பொது விருந்துகளில் மதுவகைகளை வழங்கமாட்டார்கள் என்றும் குழு நம்புகிறதாம்.

குழுவின் இத்தகைய ஏற்பாட்டினால், உடல் நல காரணங்களுக்காகவும் மதுபான அனுமதிச் சீட்டு வழங்கப்படமாட்டாது.

மதுவிலக்கு நிர்வாகம்

மதுவிலக்கு அமுல் சம்பந்தமான சட்ட, நிர்வாக நிறுவன அமைப்பு பற்றிக் குழு சில சிபாரிசு செய்திருக்கிறது.

போலீஸ்தான் மதுவிலக்கு அமுல் நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டும் என்றும், அதற்காக நல்ல தேர்ச்சியுள்ள சிப்பந்திகள் அடங்கிய விசேடப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், மதுவிலக்குக் குற்றங்கள் சம்பந்தமான இரகசியத் தகவல் தருவதற்குத் தகவல் பிரிவு, திடீர் சோதனை, திருட்டு விநியோகர்களை மடக்குதல் முதலிய வேலைகளுக்காக வாகனக் குழுக்கள் ஆகிய ஏற்பாடுகள் அவசியம் என்பதையும் குழு வற்புறுத்தியிருக்கிறது.

'களங்கம் அகற்றப்பட வேண்டும்'

மதுவிலக்கு சம்பந்தமான நிதிப் பிரச்சினைகளை ஆராய்கையில், போதை தரும் பொருட்கள், லாகிரிப் பொருள்கள் முதலியவைமீது 'எக்சைஸ்' வரி விதித்துப் பணம் வசூலிக்கும் முறை பிற்போக்கானதும், சமூக விரோதமானதுமான செயல் என்றும் குழு கூறியிருக்கிறது. வரி விதிப்பு ஏற்பாட்டில் உள்ள இந்தக் 'களங்கம்' அகற்றப்பட வேண்டும்—என்றும் அது தெரிவித்திருக்கிறது.

மத்திய சர்க்கார் உதவுமா?

மதுவிலக்கு, மாநில சர்க்காரைப் பொறுத்தப் பிரச்சினை தான்; ஆனால் சில மாநிலங்கள், தங்கள் ரெவினியூ வருமானத்துக்குப் பெரிதும் 'எக்சைஸ்' வருமானத்தையே நம்பியிருக்கின்றமையால், அவை, மதுவிலக்கை மேற்கொண்டால், நிதி நிலைமை சிரமமாகிவிடும்; எனவே, மத்திய சர்க்கார் அவைகளுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும்.

★

கருத்துவேற்றுமைக் குறிப்பு!

இக்குழுவின் இணைப்பு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பி சோதண்ட ராவ் (சென்னையைச் சேர்ந்தவர்) சமர்ப்பித்துள்ள கருத்து வேற்றுமைக் குறிப்பில், மதுவிலக்குச் சம்பந்தமாய்க் கைக்கொள்ளப்பட்டுள்ள கொள்கையை ஒரு உயர் அதிகாரக் குழுவின் பரிசீலனைக்குவிட வேண்டுமென்றும், அக்குழுவின் முடிவு தெரிவது வரையில் தனிப்பட்டவர்களுக்குப் பங்கீட்டு முறையில் மது வகைகளை அனுமதிக்கலாம் என்றும் கூறியிருக்கிறார். பூரண மதுவிலக்குக்கு முதல் கட்டமாக வாவது இப்பங்கீட்டு முறையை மேற்கொள்ளலாம் என்பது அவர் கருத்து.

"மதுவிலக்கு, மாநில சர்க்கார்கள் அரசியல் சட்ட விதிப்படி கட்டாயமாய் மேற்கொண்டாக வேண்டிய ஒன்றல்ல; போஷணைத் தரத்தை உயர்த்துவதும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் எந்த அளவுக்குக் கட்டாயமோ, அந்த அளவுக்கு இது கட்டாயமல்ல என்றுவது துணிந்து கூறலாம்," என்று அவர் கூறியிருக்கிறார். இந்த மதுவிலக்கு நிர்வாகத்துக்காகப் புதிதாய் முழு நேர உத்தியோகப் பற்றற்ற சிப்பந்தி அமைப்பை ஏற்படுத்துவது உசிதமல்ல என்றும், அந்த அமைப்பு, வேலைக்கு முட்டுக்கட்டையாகவே அமைந்துவிடுவதால் நிதி வசதி இருந்தால் போலீஸ் அமைப்பையே பலப்படுத்திப் பெருக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

தொல்லைகளையும், சிரமங்களையும் சமாளிக்க வேண்டுமாம்!

சென்னையின் திட்டங்கள் நிறைவேறுமென நம்பிக்கை கொள்ளுவதில் தவறொன்றுமில்லையாம்!

டில்லி வானொலி நிலையத்திலிருந்து சென்னை நிதி அமைச்சர் பேசுகிறார்!

புதுடில்லி, அக். 22—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராமங்களுக்கு அதிக அளவு மின்சார வசதிகளைச் செய்து தருவதற்காக, தற்சமயம் சென்னை மாநிலத்தில் உற்பத்தியாகிவரும் மின்சாரசக்தியினை இருமடங்காக்குவதற்கான திட்டத்தை சென்னை சர்க்கார் வகுத்துள்ளது," என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நேற்றிரவு டில்லி வானொலி நிலையத்திலிருந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

"நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி குறித்து நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகள், சென்னை மாநிலத்தின் தொழில் துறைக்கு வளமான எதிர்காலம் இருக்கும் என்ற நம்பிக்கையை ஓரளவு அளித்துவருகின்றன," என்று குறிப்பட்டார்

"உபரியாக தண்ணீர் வசதிகளைக் கொண்டிருக்கும் அண்டை மாநிலங்களின் ஒத்துழைப்புடன், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளை அடுத்திருக்கும் ஏராளமான நிலங்களுக்கு இப்போதைவிட அதிகமான அளவு நீர்ப்பாசன வசதி செய்து தர முடியுமென சென்னை சர்க்கார் நம்புகிறது.

"இந்த நம்பிக்கைகளெல்லாம் செயலாக மாறுவதற்கு முன்னால், நாம், பல தொல்லைகளையும், சிரமங்களையும் சமாளித்துத் தீரவேண்டிய நிலையிலிருக்கிறோம்; எனினும், நமது மக்களின் தன்னம்பிக்கை உணர்ச்சியையும், நாட்டு வளர்ச்சிப் பணிகளில் அவர்கள் இதுவரையில் காட்டியுள்ள உற்சாகத்தையும் மனதிலிறுத்தி நோக்குகையில், நம்முடைய திட்டங்களெல்லாம் நன்கு நிறைவேற்றப்படுமென்று நம்பிக்கை கொள்ளுவதில் தவறு ஒன்றுமில்லை."

டில்லியில் மூடப்பட்டு சென்னையில் இயங்கும்

புதுடில்லி, அக். 25—

மத்திய கல்வி மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த தென்பகுதி காரியாலயம், 26-ந் தேதியிலிருந்து சென்னையில் இயங்க ஆரம்பிக்கிறது. இதுவரை புதுடில்லியில் இயங்கிவந்த இக்காரியாலயம் 17-ந் தேதியன்று அங்கு மூடப்பட்டது இதன் தலைமைக் காரியாலயம் சென்னை பல்கலைக் கழகக் கட்டடத்தில் இருந்துவரும்.

தென்பிராந்தியத் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதும், இப்பகுதியில் உள்ள மாநில சர்க்கார்களுடனும், மற்றும் தொழில்கள், தொழில் நுட்பப் பள்ளிகள் ஆகியவை போன்ற மற்ற நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளுவதும் இக்காரியாலயத்தின் முக்கிய அலுவல்களாகும்.

கழகச் செய்திகள்

செம்பியத்தில் தி.மு. கழக பொதுக்கூட்டம்

23—10—55 மாலை 6 மணியளவில் சென்னை பெரம்பூர் (செம்பியம்) குருசாமி இராமணியார் தோட்டத்தில், செம்பியம் தி. மு. கழகக் கிளையின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமை தாங்கினர்.

தலைமை உரைக்குப் பின் தோழர் சொர்ணம் சிறிது நேரம் பேசினர்.

பின்னர், தீர்மானம் ஒன்று கிளைக் கழகத் தோழரால் வாசிக்கப்பட்டு, மக்களின் பேரொலிக்கிடையே நிறைவேற்றப்பட்ட பின்பு, தோழர் காஞ்சி மி. மனோகரன் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

தோழர் மனோகரன் அவர்களுக்கு செம்பியம் நெடுஞ்செழியன் மன்றத்தின் சார்பில் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர்.

இறுதியில் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது. (ச. தி)

இலங்கை கிராண்ட்பாஸ் தி. மு. கழகம்

16—10—55 மாலை 4-30 மணிக்கு, கழகப் பணிமனையில், தோழர் இரா. அதிமணி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் ஆர். ஆர். கே. டேவர், சுப. இராசமாணிக்கம், எஸ். எஸ். மணி ஆகியோர் முறையே, செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், இலங்கையில், தமிழும் - சிங்களமும் சரிசம அரசாங்க மொழியாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தோழர்கள் பி. எம். ஜலால், உமர், தேவராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அந்தேரி தி. மு. கழகம்

9—10—55 காலை 10 மணியளவில், கோல்டுங்ரி பணிமனையில் தோழர் எல். எம். பாண்டியன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் எல். கணேசன், எஸ் முத்து, இரா. தஞ்சைத்துரை ஆகியோர் பேசிய பின்னர் தோழர் வி. சுப்பையா அவர்களிடம் கிளைக் கழகப் பொருளாளர் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

விசால ஆந்திரம்: அடுத்த ஆண்டிலேயே அமையும்

புதுடில்லி, அக். 25—

'விசால ஆந்திரம்' அமைவது உறுதியாகிவிட்டதாகத் தெரிய வருகிறது.

அடுத்த ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ந் தேதியன்று, 'விசால ஆந்திரம்' அமையக்கூடும்.

இதுவரை, 'விசால ஆந்திரம்' அமைவதை எதிர்த்து வந்த ஐதராபாத் முதலமைச்சர் பி. இராமகிருஷ்ண ராவ், இப்போது ஆதரிப்பதாகத் தெரிகிறது.

ஆந்திராவின் பிரபல காங்கிரஸ் தலைவர்களும், ஐதராபாத்தில் உள்ள தெலிங்கானா பகுதியின் பிரபல காங்கிரஸ் தலைவர்களும் இன்று செகந்திராபாத்தில் மாநாடு ஒன்றில்கூடி இது குறித்த முடிவு மேற்கொள்ளுவர் என்று தெரியவருகிறது.

இங்கு நடைபெற்ற முதன் மந்திரிகள் மாநாட்டில், தொடர்புடைய பகுதித் தலைவர்கள் ஒப்புவாரானால், ஆந்திர சட்ட மன்றத்தினரும், ஐதராபாத்தில் உள்ள தெலிங்கானா பகுதி சட்ட மன்றத்தினரும் இப்போதே முடிவு மேற்கொள்ளலாம் என்றும், 1961 வரையில் இதனை ஒத்திப்போடத் தேவை இல்லை என்றும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

பெல்லாரி ஆந்திரருக்குத் திரும்பவும் தரப்பட்டது, தரப்பட்டது தான் என்றும், அதுபற்றி மீண்டும் பேசக்கூடாது என்றும் டில்லி மாநாட்டில் கூறப்பட்டதாம்.

அதேபோல, தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரளத்துடன்தான் இணையும் என்றும், அவை தமிழகத்துடன் இணையும் பேச்சு இல்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

★

சென்னை, அக். 25—

"மாநிலக் குழுவின் திட்டத்தின் அடிப்படையில், மாநிலங்களைத் திருத்தி அமைப்பது குறித்து, வரும் நவம்பர் 8, 9-ந் தேதிகளில் கூடும் காங்கிரஸ் செயற்குழு இறுதி முடிவு செய்யும்," என்று, சென்னை திரும்பியுள்ள மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை தமிழகத்துடன் இணையவேண்டுமென்ற கோரிக்கையை மேலும் வலியுறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திரா-சென்னை எல்லைத் தகராறுகள் குறித்து, அடுத்த திங்களில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும், அவற்றில் ஒரு சமரச முடிவு காணப்படும் என்று நம்புவதாயும் அவர் மேலும் தகவல் தெரிவித்திருக்கிறார்.

கழகக் கூட்டம்

★

படித்துறை

27—10—55 மாலை 5 மணிக்கு, தியாகராயர் திடலில், தோழர் ரா. காளிதாசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் வை. வீழிநாதன், மா. மாணிக்கம் ஆகியோர் பேசுவர்.

போளூர் (வ. ஆ.) வட்டார தி. மு. கழகச் செயலாளர்கட்கு

"6—11—55 அன்று மாலை, போளூரில், தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும். அதுசமயம், போளூர் வட்டாரத்திலுள்ள தி. மு. (கிளை) கழகச் செயலாளர்கள், தங்கள் தங்கள் கிளைக் கழகத்தின் மாநில மாநாட்டு நிதியின் பங்குத் தொகையை, தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் அளித்துவிட வேண்டுகிறேன். செயலாளர்கள் உடனடியாக நிதி வசூலில் ஈடுபட்டு, 6—11—55 அன்று அளித்து, வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகத்தின் கோட்டாவைப் பூர்த்திசெய்ய வேண்டுகிறேன்" என்று, வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

சென்னை - சைதாப்பேட்டை தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

27—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை-சைதாப்பேட்டை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழக இல்லத்தில் நடைபெறும். அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது—என்பதற்கு, எண்ணற்ற காரணங்களைக் காட்டிய நாம், ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஒரு காரணமாகச் சுட்டிக் காட்டினோம். அந்தக் காரணத்திற்குப் பதிலளிப்பதற்கே, இங்குள்ளோர்—கனம் மந்திரி சுப்பிரமணியம் போன்றோர்—ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு விதமாகப் பேசி மழுப்பினார்கள். வடநாட்டு எஜமானர்களின் தூதுவர்களது முன்னிலையில் பேசும்போது, 'எல்லாத் திட்டங்களும் வடக்கிலேயே; தெற்கில் எதும் இல்லை; இந்த நிலை நீடித்தால் இந்தியாவின் அரசியலில் ஆபத்தான கொந்தளிப்பு ஏற்படும்'—என்று பேசினர். பின்னர், மக்களிடத்தில் பேசுங்கையில், 'ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லாம் சரியாகத்தான் நடக்கின்றது' என்று பேசினர். நாம் காட்டிய எத்தனையோ காரணங்களுள் ஒன்றுக்குப் பதிலளிக்கவே, இப்படி இடத்திற்கு இடம் முரண்படப்பேசி, பூசிமெழுக நினைக்கின்றனர். இவர்கள் எப்படி மறுக்கப்போகின்றார்கள்?—நாம் காட்டுகிற இதர காரணங்களை மறுப்பதற்கு; இவர்களால் எப்படி முடியப்போகிறது?

"வடநாட்டவருடன் நமக்கு ஏன் இந்தத் தொடர்பு? அந்தத் தொடர்பினால்தானே நாம் நமது தேவைகளைத் தேடிப் பெற்றுக்கொள்ள இயலாதவர்களாயிருக்கிறோம்? இந்தத் தொடர்பைத் துண்டித்துவிட்டால் அல்லாது, நமக்கு எப்படி வாழ்வு கிடைக்கப் போகிறது?—என்று கூறுகிறோம்; அப்படிக் கூறும்போது, நாம், வெறிகொண்டு கூவுவதாகச் சிலர் பேசுகின்றனர்.

"யாரிடம் வெறி தாண்டவமாடுகிறது? 'திராவிட நாடு' வேண்டுமென்பதற்காக நியாயமான காரணங்களைக் காட்டி ஜனநாயக வழி செல்லும் நம்மிடமா? அல்லது, 'இனி இந்தியா வைத்துண்டாட அனுமதிக்கமாட்டோம்' என்று ஜனநாயகத்தை மறந்து பேசுகிற அவர்களிடமா? யாரிடம் வெறி தாண்டவமாடுகிறது?"

—என்று, தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள், சென்னை 43-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 23—10—55ல் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(அவர் சொற்பொழிவு முடிவுறவில்லை தொடர்ந்து வெளிவரும்.)

11-ம் சுகாதார வார விழா

25-10-55 மாலை 6½ மணிக்கு, சென்னை-சூளை, குருசடிபுரத்தில், நகர இளைஞர் கழகச் சார்பில், தோழர் சி எம். பரிபூரணம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். வரதராசன் எம் ஏ., ஆதி தேவனுதன் ஆகியோர் பேசுவர்.

26-10-55 மாலை 6½ மணிக்கு, சென்னை, இந்து யூனியன் கமிட்டி உயர்நிலைப் பள்ளியில், அமெரிக்க செய்தி நிலையத்தாரால் ஓர் படக் காட்சி நடைபெறும்.

நிகழ்ச்சி

சென்னை 43 வது வட்ட தி மு. கழகச் சார்பில் மீர்சாகிப்பேட்டை ராமாராவ் தோட்டத் திடலில் 23—10—55 மாலை 6 மணியளவில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாற்றுகையில், கழக வளர்ச்சி இலட்சியம் குறித்து சுருக்கமாக விளக்கம் தந்தார்.

அடுத்துத் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சிறிது நேரம் பேசினார்.

பின்னர் தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் கழக இலட்சியம் குறித்து அரியதோர் சொற்பொருக்காற்றினார்.

தோழர் சம்பத் அவர்களுக்கு, இரு மன்றங்கள் சார்பில் கைத்தறி ஆடையும், மலர் மாலையும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந—சி.)

தென் வியட்நாம் மன்னர் பதவி பறிக்கப்பட்டார்!

பிரதமர் தீன் தியெம் பெற்ற வெற்றி

பாரிஸ், அக். 24—

தென் வியட்நாமில் கடந்த ஆறு ஆண்டு காலமாக, ஆதிபத்தியக்காரர்களின் கைப்பொம்மை மன்னராக விளங்கி வந்த பாவோடாய், இன்று பதவி பறிக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை அவருக்கு ஆதரவு வழங்கிவந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள், இப்போது, அந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டிருக்கின்றனர்.

பிரதமரான தீன்தியெமே இனி தென் வியட்நாமின் அரசாங்கத் தலைவராக இருப்பார் என்று பிரெஞ்சு சர்க்கார் அறிவித்துள்ளது.

தீன் தியெமுக்கு அமெரிக்காவின் பின்னணி பலம் இருந்துவந்தது—வருகிறது.

மன்னர் பாவோடாய் தொடர்ந்து அரசாங்கத் தலைவராக இருக்க வேண்டுமா? கூடாதா?—என்பதற்காக, தீன் தியெம் நடத்திய வாக்கெடுப்பில், பெருவாரியான மக்கள் 'மன்னர் வேண்டாம்' என்று, தீன் தியெமுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றனர். இதைத் தொடர்ந்தே மன்னர் பாவோடாய் 'மாஜி'யாக்கப்பட்டிருக்கிறார்—பிரெஞ்சுக்காரர்களால்!

இந்த மன்னர், தென்வியட்நாமிற்கும்—வடவியட்நாமிற்கும் போர் மூண்ட காலத்திலிருந்து இன்றுவரை இந்தோ—சீன பக்கமே திரும்பிப் பாராது, பிரான்சு நாட்டில் உள்ள கிவெய்ரா எனுமிடத்திலேயே தங்கி வருகிறார்.

தீன் தியெம், இன்றைக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன், இதே பாவோடாயின் உத்தரவுகளின் பேரில் பிரதமராக்கப்பட்டார் அன்று முதல் இருவருக்கும் அதிகாரப் போட்டி வலுத்து வந்தது.

இதற்கு முன், பலமுறை, தீன் தியெம் தலைமையில் உள்ள தென் வியட்நாம் சர்க்கார், மன்னரை அதிகார பீடத்திலிருந்து அகற்ற முயற்சித்தது உண்டு; ஆனால், ஒவ்வொரு முறையும் எப்படியோ மன்னர் தப்பித்துக்கொண்டு வந்தார்.

ஆனால், இப்போது, வாக்கெடுப்பின் விளைவாக அவர் துரத்தப்படுகிறார்.

வாக்கெடுப்பின் முடிவுகள் இன்னும், முழுவதுமாகக் கிடைக்காவிடினும், இதுவரை வெளிவந்துள்ள பெரும்பாலான இடங்களில் தீன் தியெமுக்கே அபரிமிதமான வாக்குகள் கிடைத்திருக்கின்றன.

முழுவதுமாக முடிவுகள் தெரிந்ததும், புதன் கிழமையன்று தென்வியட்நாமை ஒரு குடியரசு நாடாகவும், அதன் தலைவராகத் தன்னையும், தீன்தியெம் பிரகடனம் செய்வார் என்றும் தெரியவருகிறது.

இந்தோ-சீன ஒப்பந்தப்படி, இரு கூறுகளாக்கப்பட்ட வியட்நாமை மீண்டும் ஒன்றுபடுத்துவதற்கான தேர்தல்களை நடத்துவது குறித்து வட வியட்நாம் சர்க்காருடன் தான் பேச்சுவார்த்தை நடத்த விரும்பவில்லை என்று தீன் தியெம், பிடிவாதமாகக் கடந்த காலத்தில் மறுத்து வந்திருக்கிறார். இப்போது வாக்கெடுப்பின் விளைவாகப் புது அந்தஸ்தும், செல்வாக்கும் பெறும் அவர், தொடர்ந்து தேர்தல்கள் நடைபெறுவதற்கு முட்டுக்கட்டையிடக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

தென் வியட்நாமில் உள்ள பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 35 இலட்சமாகும்; இதில் பகுதிப் பேருக்கு மேல் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை; சிலர் 'இருவருமே கூடாது' என்று கருதுவதால், கலந்துகொள்ளவில்லை; பலர், இந்த வாக்கெடுப்புப் பற்றி அக்கரை இல்லாததால் கலந்துகொள்ளவில்லை—என்று கூறப்படுகிறது.

'மாஜி'யாக்கப்பட்டுள்ள மன்னர் பாவோடாய் 42 வயதானவர்

1945 ஆகஸ்டு 15-ந் தேதிவரை அன்னும் மன்னராக இருந்தவர். அங்குள்ள தேசியவாதிகள் சுதந்திரம் கோரியபோது, பதவி துறந்து, ஹாங்காங்கில் தமது மனைவியுடன் குடியேறினார்.

பின், 1949-ல், பிரெஞ்சு-வியட்நாம் ஒப்பந்தப்படி, வியட்நாம், பாங்காங், கொச்சின் - சீனா ஆகியவை கொண்டு உருவாக்கப்பட்ட புதிய சுதந்திர நாடான வியட்நாமின் மன்னர் பதவியை ஏற்றுக்கொண்டார்; அன்றிலிருந்து இன்றுவரை நீடித்திருந்த அந்த மன்னர், இப்போது, மன்னராக்கப்பட்ட ஆதிபத்தியக்காரர்களாலேயே மனிதராக்கப்பட்டு விட்டார்.

அமெரிக்கா அங்கீகரிக்கிறது

வாக்கெடுப்பின் விளைவாக, பிரதமர் தீன் தியெமையே தென் வியட்நாம் அரசியல் தலைவராக ஏற்றுக்கொள்வதென அமெரிக்கா அங்கீகாரம் அளித்திருக்கிறதாம்.

கோவாவுக்குள் கள்ளக் கடத்தல்

இந்திய அதிகாரிகளின் உதவியுடன் நடைபெறுகிறதாம்!

கோவா எல்லை, அக். 24—

பொன், கரன்சி நோட்டுக்கள், மது வகைகள், மற்றும் முக்கியமான பொருட்கள் எல்லாம் இந்திய அதிகாரிகளின் உதவியின்பேரில் கோவாவிற்குள் கொண்டு வரப்படுவதாயும், இந்திய சர்க்கார் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும், கோவா தேசீயவாதிகள் இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

கடந்த கிழமையன்று ஒரு மீன் பிடிப்பவரிடமிருந்து ரூ 1,75,000 பெறுமான கரன்சி நோட்டுகள் பிடிபட்டன என்றும், பின்னர் ஒரு உணவு விடுதி உரிமையாளர் தலையிட்டதின் பேரில், அந்த மீன் பிடிப்பவர் விடுதலையாகி, ரூபாய் நோட்டுக்களும் அவரிடமே திருப்பித் தரப்பட்டன என்றும் தேசிய வாதிகள் தெரிவித்திருக்கின்றனர்

கோவா மீது இந்தியா விதித்துள்ள பொருளாதாரத் தடையை முறியடிக்க இந்திய அதிகாரிகளே உதவுவது வேதனையானது என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

விவாதிக்கின்றனர்

போர்ச்சுகீசிய அயல் நாட்டு மந்திரி டாக்டர் குன்ஹா, இங்கிலாந்தின் வெளிவிவகார இலாகா மந்திரி மாக்மில்லனுடன் கோவா தகராறு பற்றி பாரிசில் சந்தித்து விவாதித்ததாகத் தெரியவருகிறது.

மதுவிலக்கு அமுலாகும் இலட்சணம்!

சென்னை மாநிலத்தில் 1949-50-ல் 29,972 மதுவிலக்குக் குற்றங்கள் நடந்திருந்தன; ஆனால், 1953-54ல், இது, 42,492 ஆக உயர்ந்திருக்கிறதாகக் கூறப்படுகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகமாகியிருப்பதாகவும் தெரியவருகிறது.

என்றாலும், இதை மிகைப்படுத்திப் பேசுவதாக, மது விலக்கு விசாரணைக் குழு தெரிவித்திருக்கிறது.

ஆயுதபலத்தை மேலும் எகிப்து பெருக்குகிறது

கெய்ரோ, அக் 24—

எகிப்திய நாட்டிற்கு செக்கோஸ்லோவேக்கியாவிலிருந்து மேலும் ஆயுதம் வழங்கப்படுவதாகத் தெரியவருகிறது.

மூன்று ரஷ்யக் கப்பல்களில் அலெக்சாண்டிரியாவுக்கு இந்த ஆயுதங்கள் வந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த வியாழனன்றுதான், 133 பெட்டி செக் ஆயுதங்களை ஒரு ரஷியக் கப்பல் அலெக்சாண்டிரியாவில் கொண்டுவந்து இறக்கியதாம்.

இதற்கிடையில் செக் நாட்டுத் தூதுவர், எகிப்தியப் பிரதமர் நாசரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.